**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை -2023**

---

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஆண்டிற்குரிய பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்**

அதிகாரசபையினால் இறுதியாக தயாரித்த 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **நிதிக்கூற்றுக்களின் விடயங்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| <u>சொத்துக்கள்</u> | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 14,615,806 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 20,797,660 |
| **மொத்த சொத்துக்கள்** | **35,413,466** |
| <u>உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்</u> | |
| உரிமை மூலதனம் | 20,544,005 |
| <u>பொறுப்புக்கள்</u> | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 10,791,212 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 4,078,249 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **14,869,461** |
| மொத்த வருமானம் | 47,639,043 |
| மொத்த செலவினம் | 43,898,460 |
| **மிகை** | **3,740,583** |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்கள் உடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமானக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 119 | PD-6379 என்ற கெப் வண்டி 2020 ஆம் ஆண்டின் போது தலைவரால் ஓட்டிச் செல்லும் போது ஏற்பட்டிருந்த இயந்திர கோளாறு தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட | இந்தப் பழுது பார்த்தலுக்காக செலவான ரூபா 498,110 தொகையை அறவிடுவதற்குரிய முதலாவது மற்றும் இரண்டாவது மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்ட போதும் அவரால் பதிலளிக்காதிருந்தமைய | பரிசோதனை அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விசாரணையில் பழுது பார்ப்பதற்காக செலவான ரூபா 498,110 தொகை தலைவரிடம் இருந்து அறவிட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்தத் தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ால் கணக்காய்வு குழு பரிந்துரையின் அடிப்படையில் கைத்தொழில் அமைச்சின் சட்டப் பிரிவு ஊடாக வழக்கு தொடர்வதற்கு அந்தக் குழுவின் அறிக்கை பிரதி ஒன்றுடன் உரிய கடிதம் கைத்தொழில் அமைச்சிற்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |
| (ii) | நிதிப்பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாதத்தின் இறுதியின் போதும் கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் 2023 திசெம்பர் மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்று கணக்காய்விற்காக 2024 யூலை 19 ஆந் திகதி அதாவது 06 மாதங்களின் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்த து. | ஏற்றுக்கொள்கின்றோம். நிதிப்பிரமாணம் 395(இ) இன் பிரகாரம் தற்போது ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வங்கி இணக்கக் கூற்று குறித்துரைத்த திகதியில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 502(2) | ஒவ்வொரு பிரிவிற்கும் உரியதாக பயன்பாட்டில் காணப்படுகின்ற நிலையான சொத்துக்கள் தொடர்பாக | அதிகாரசபையின் நிலையான சொத்துக்கள் முகாமைத்துவத்தில் வழுக்கள் காணப்படுவதை ஏற்றுக்கொள்கின்றோம். ஐயவினாவில் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் இருப்பு, பாதுகாப்பு மற்றும் அறிக்கையினை வைத்துக் கொள்ளல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏற்றுக்கொள்ளப்பட்ட வகைப்படுத்தல் முறையொன்று பின்பற்றப் படாதிருந்ததுடன் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களின் பௌதீக ரீதியான அளவு நிலையான சொத்துப் பேரேட்டுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்க வில்லை. சொத்துக்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை பின்பற்றாமையின் காரணமாக சொத்துக்களின் பௌதீக இருப்பை முகாமைத்துவத்திற்கு உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்ததுடன் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் முகாமைத்துவம் உரிய கவனம் செலுத்தப்பட்டிக்க வில்லை. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டுள்ளது. அதிகார சபையின் சொத்துக்கள் QR குறியீட்டைப் பயன்படுத்தி இலக்கம் இடப்பட்டுள்ளதுடன் அதனை விருத்தி செய்தல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 756(6) | அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு சபை 2023 மே 31 ஆம் திகதி அதாவது 05 மாத தாமதத்துடன் நியமிக்கப் பட்டிருந்ததுடன் பொருள் மெய்மையாய்வு சபையினால் கையொப்பம் | 2022 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு சபை நியமதித்தல் தாமதம் அடைந்ததை ஏற்றுக் கொள்கின்றோம். 2022 ஆம் ஆண்டுக்குரிய மெய்மையாய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி மெய்மையாய்வு சபையினால் வழங்கப்பட்டு கணக்காய்வு மற்றும் | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் குறித்துரைத்த கால அட்டவணையின் படி பொருள் மெய்மையாய்வு நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடப்படாத வரைவு அறிக்கை ஒன்று மாத்திரம் 2024 ஆகஸ்ட் 30 ஆந் திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2023 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவக் குழுவின் அவதானிப்புக்களுக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன் அடுத்து வரும் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்காக சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு சபை 2023 திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி நியமிக்கப்பட்டதுடன் இந்த மெய்மையாய்வுக்குரிய வேலை நடவடிக்கைகளில் அநேகமானவை தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பொது முயற்ச்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டிக் கோவையின் 4.4 ஆம் பந்தி | அதிகாரசபையின் பதவியணியினரில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று ஸ்தாபிக்கப் படாதிருந்ததுடன் அதற்காக பதிற்கடமை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 முற்பணக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவருக்கு | ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது முற்பணம் தீர்த்து வைத்தல் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தீர்த்து வைக்கும் நடவடிக்கைகள் | முற்பண கட்டுப்பாட்டிற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கி நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கப்பட்ட பணிகளை பூர்த்தி |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்ட முற்பணத் தொகை வழங்கப்பட்ட பணி முடிவடைந்த உடன் தீர்க்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் 185 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 2,891,029 ஆன முற்பணம் பெறப்பட்ட பணிகள் முடிவடைந்திருந்த போதும் 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்கொள்ளப்படுகின்றது. | செய்த உடன் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேலும் 2017, 2018, 2019, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட முறையே ரூபா 353,850 தொகை, ரூபா 586,330 தொகை, ரூபா 657,322 தொகை, ரூபா 213,575 தொகை மற்றும் ரூபா 4,327,165 ஆன முற்பணங்கள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது முற்பணத்தை தீர்த்து வைத்தல் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தீர்த்து வைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | முற்பணக் கட்டுப்பாட்டிற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கி நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கப்பட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒவ்வொரு தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்ட இடம், திகதி, பங்குபற்றிய பயிலுனர்களின் எண்ணிக்கை மற்றும் அது தொடர்பான விபரங்கள், செய்யப்பட்ட செலவினம், செலுத்தப்பட்ட முற்பணம், அந்த முற்பணத்தை தீர்த்து வைத்தல் தொடர்பான விபரம், பயிற்சி பெறுநர்களின் தொழில் முயற்சி அபிவிருத்தி செயல் முன்னேற்றம் போன்ற சகல | ஏற்றுக்கொள்கின்றோம். மீளாய்வாண்டில் சகல தகவல்களையும் உள்ளடக்கிய அறிக்கை பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் சில தகவல்கள் மாத்திரம் மாவட்ட மற்றும் பிரதான அலுவலகத்தில் பேணிச் செல்லப்படுகின்றது. மீளாய்வாண்டின் போதும் எதிர்காலத்தின் போதும் இந்த தகவல்களை முறையாக பிரதேச உத்தியோகத்தர்கள் ஊடாக பெற்றுக் கொள்வதற்கு அதிகார | முழுமையான மற்றும் சரியான தகவல்களை உள்ளடக்கி தொழில் முயற்சி அபிவிருத்தி தொடர்பான தரவு முறைமை ஒன்றை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்களையும் பெறக்கூடிய அறிக்கை ஒன்று அல்லது தரவு முறைமை ஒன்று (Deta Base) உரிய பிரிவில் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | சபை எதிர்பார்த்துள்ளது. | |
| (ஆ) | அதிகார சபைக்காக ISO சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 71,762 தொகையும், 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 125,000 தொகையும், 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 35,880 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 232,642 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ISO சான்றிதழ் பெறப்பட்டிருக்க வில்லை. | 2016 ஆம் ஆண்டு முதல் சில சந்தர்ப்பங்களின் போது நிறுவனம் சில இடங்களுக்கு மாற்றப்பட்டமை மற்றும் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட கொவிட் தொற்று நோய் தாக்கத்தின் காரணமாக இந்த செயற்பாடுகளை நடைமுறை ரீதியில் மேற்கொள்ள முடியாதிருந்தது. இதற்காக நிறுவனத்தின் உள்ளக செயல் நடைமுறை அதிகார சபையால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்க வேண்டி இருந்ததுடன் அதற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்துவதற்காக போதியளவான நிதியேற்பாடு காணப்படாமை, இந்த செயல் நடைமுறை உள்ளக ரீதியில் தயாரிப்பதற்காக போதியளவான பதவியணியினர் முன்னர் காணப்படாதிருந்தமை போன்ற காரணங்களினால் இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே உரிய ஆண்டுகளில் இறுதிக் கணக்குகள் தயாரித்தல் தாமதம் அடைந்ததன் காரணமாக அது தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகளும் தாமதம் அடைந்தமையால் | திட்டமிடப்பட்டுள்ள முறையில் ISO சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிறுவனத்தின் கணக்காய்வை மேற்கொள்வதற்கு அதுவரையில் முடியாதிருந்தது. தற்போது ISO சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நிதியேற்பாடுகள் ஒதுக்கப்படாதிந்ததுடன் மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் மீண்டும் ISO பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்க முடியும். | |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளுக்காக மாத்திரம் பிரதான பெறுகைத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 பந்தியின் பிரகாரம் விரிவான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தயாரிக்கப்பட்டிருந்த பிரதான பெறுகைத் திட்டத்தில் பெறுகை பணிகளின் ஆரம்பம் மற்றும் இறுதித் திகதிகள் தீர்மானிக்கப் படாதிருந்ததுடன் அதற்குப் பதிலாக கணக்காண்டின் ஆரம்பம் மற்றும் இறுதித் திகதிகள் பயன் படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். அதிகார சபை திட்டமிடப்பட்ட பிரகாரம் திறைசேரி ஊடாக உரிய காலப் பகுதயில் நிதி கிடைக்காமையினால் உரிய பெறுகை நடவடிக்கைகளுக்காக குறித்துரைத்த திகதி ஒன்றை வெளியிட முடியாதிருந்தது. அதனால் கணக்காண்டின் ஆரம்ப இறுதி திகதிகள் இதற்காகப் பயன் படுத்தப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சகல பெறுகைப் பணிகளையும் உள்ளடக்கி குறித்துரைத்த காலப் பகுதியுடன் விரிவான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தில் 13(ஆ), 13(உ) மற்றும் 13(எ) பிரிவுகளின் பிரகாரம் அதிகார சபையில் கீழே | | |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (i) | வெளிநாட்டு சந்தைகளில் வெற்றி கொள்வதற்கு முடியுமான உள்நாட்டு தொழில் முயற்ச்சிகளை சர்வதேச மயப்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெளியில் ஸ்தாபித்தல் மற்றும் அமுல்படுத்துதலுக்கு ஆர்வமூட்டுவதற்காக ஊக்குவித்தல். | ஏற்றுக்கொள்கின்றோம். தொழில் முயற்சிகளை சர்வதேச மயப்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெளியில் ஸ்தாபித்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக தற்போது அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் பங்களிப்பு வழங்கப்படுகின்றது. இந்த நோக்கங்களுக்காக விசேடமாக ஸ்தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு எங்களின் தொழில் முயற்சியாளர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.. எனினும் 2024 ஆம் ஆண்டு முதல் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் தொழில் முயற்சியாளர்கள் சர்வதேச சந்தை கண்காட்சிகளுக்கு பங்கு பற்றுதல், உள்நாட்டு வெளிநாட்டு வணிக சபைகள் ஊடாக வியாபாரங்களை தொடர்புபடுத்தி கட்டி எழுப்புவதற்கான செயலமர்வுகள்/ கலந்துரையாடல்களை தொடர்புபடுத்துதல், தொழில்நுட்ப பரிமாறல்களுக்கான வெளிநாட்டு வியாபார துறைகளில் பரிசோதனைகளை மேற்கொள்ளல் போன்றவற்றின் மூலம் இலங்கைக்கு வெளியே வியாபாரங்களை ஸ்தாபிப்பதற்காக ஆர்வமூட்டுதல் மற்றும் அதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. | சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முன்னுரிமையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | தொழில்நுட்ப அபிவிருத்தி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேடன் உரித்து வணிக மயப்படுத்துவதற்கு உரிய ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்காக | ஏற்றுக்கொள்கின்றோம். சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் தொழில்நுட்ப நிதியம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அதிகார சபைக்கு இதுவரை இயலுமை கிடைத்திருக்கவில்லை. அதற்காக ஆரம்ப நிதியத்தை வழங்குவதற்கு | சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பில் முன்னுரிமை நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியம் ஒன்றை ஸ்தாபித்தல். | தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு 2019 ஆம் ஆண்டில் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்ட போதும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. எதிர்காலத்தில் இதற்காக முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தைப் பெற்று நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தலின் கீழ் 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வியாபாரங்கள் (Franchise Shops) மூலம் ஆகக் குறைந்தது 25 வழங்குனர்களை இனங்காண்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எந்த ஒரு வியாபார முயற்சியும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் 13(உ) பிரிவின் பிரகாரம் அபிவிருத்திகளை அடைந்து கொள்வதற்காக தேவையான உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கான 2023 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அதிகாரம்பெற்ற விற்பனை சாலைகளை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக தகைமை உள்ள தரப்பினரைக் கண்டறிவதற்கு முடியாதிருந்தது. மேலும் போதியளவான நிதி காணப்படாமையினால் அந்த நிதி ஏனைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டது. | சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பில் முன்னுரிமை நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையினால் பயிற்சியளித்தல் மற்றும் நிதி உதவி வழங்குவதன் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகின்ற தொழில் முயற்சிகள் தொடர்பாக கால ரீதியில் பின்தொடர் நடவடிக்கைகளோ அல்லது மதிப்பீடு செய்வதற்காகவோ மதிப்பீட்டு குறிகாட்டிகள் அறிமுகப்படுத்தப்படாதிருந்த துடன் ஒவ்வொரு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிலும் உருவாக்கப்பட்ட செயற்பாட்டில் உள்ள தொழில் முயற்சிகளின் | ஏற்றுக்கொள்கின்றோம். அதிகார சபையின் மூலம் பிரதேச மட்டத்தில் தொழில் முயற்சிகளை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பிரதேச உத்தியோகத்தர் ஊடாக செயற்படுத்தப்படுகின்றது. அபிவிருத்தி செய்யப்பட்ட மற்றும் புதிய தொழில் முயற்சியாளர்களின் தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை பிரதேச மட்டத்தில் பேணிச் செல்லப்படுகின்றது. பிரதேச உத்தியோகத்தர்களுக்கு வருடாந்தம் வழங்கப்படுகின்ற இலக்குகளை உள்ளடக்கி செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் | மதிப்பீட்டு குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துவதற்கும், தொழில் முயற்சியார்களின் செயல்முன்னேற்றம் தொடர்பாக உரிய பிரகாரம் அறிக்கை பேணிச்சென்று மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| எண்ணிக்கை மற்றும் அவர்களின் தொழில் முயற்சிகளின் செயல் முன்னேற்றம் தொடர்பாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றமை உறுதிப்படுத்தப்படவில்லை. அதனால் அதிகார சபையின் பிரதான நோக்கமான செயற்பாடு நிலையில் உள்ள தொழில் முயற்சிகளை ஸ்தாபிக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் செயல் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வின் போது மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | செயல் முன்னேற்றம், ஆண்டின் இறுதியில் புதிய தொழில் முயற்சியாளர்களினதும் மற்றும் அபிவிருத்தி செய்யப்படுகின்ற தொழில் முயற்சியாளர்களினதும் எண்ணிக்கையில் வருடாந்தம் அதிகார சபையின் மூலம் பெறப்படுகின்றது. சகல அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினதும் பெறுபேறுகள் ஆண்டின் இறுதியில் பெறப்படுகின்றது. ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட தொழில் முயற்சியார்களின் எண்ணிக்கைகளைக் குறிப்பிடுகின்ற தகவல்கள் அதிகார சபையின் பிரதான அலுவலகத்தின் மூலம் பேணிச் செல்லப்படுகின்றது. |

## 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பணிகளின் செயல் முன்னேற்றம் கீழே குறிப்பிடப்படுகின்றது. | | |
| (i) | 2023 ஆம் ஆண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் Made in Sri Lanka வியாபார கட்டமைப்பில் ஆகக் குறைந்தது 1000 வழங்குனர்களை பதிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 216 வழங்குனர்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தனர். | ஏற்றுக் கொள்கின்றோம். Made in Sri Lanka வியாபார கட்டமைப்பில் 2021 திசெம்பர் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதும் 2023 ஒக்தோபர் 16 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் முறைமைகளைப் பகுப்பாய்வு செய்து குறைபாடுகள் இனங்காணப்பட்டிருந்தது. தற்போது மேற்கூறப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளதுடன் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் மீண்டும் ஒரு தடவை வியாபார கட்டமைப்பின் நிலைமை பரீட்சிக்கப்படுகின்றது. | நடைமுறை ரீதியான நிலைமையினைக் கவனத்தில் கொண்டு திட்டங்கள் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு உரிய தரவு முறைமை ஒன்றை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்தின் கீழ் ஆகக் குறைந்தது 750,000 தொழில் முயற்சியாளர்களை பதிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 260,000 தொழில் முயற்சியாளர்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தனர். | ஏற்றுக்கொள்கின்றோம். தரவு முறைமையில் காணப்பட்ட தொழில்நுட்ப குறைபாடுகளின் காரணமாக தகவல்கள் போதியளவு எண்ணிக்கையில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. தற்போது இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருந்த போதும் கைத்தொழில் அமைச்சினால் தேசிய கைத்தொழில் தரவு முறைமை ஒன்றை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டமையால் எங்களால் சேகரிக்கப்பட்ட தகவல்களும் அந்த தரவு முறைமையில் ஒன்றிணைப்பதற்கு கைத்தொழில் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனால் இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | நடைமுறை ரீதியான நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு திட்டங்கள் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2023 ஆம் ஆண்டின் SME Connect Online Platform செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் 20 சதவீதம் மாத்திரம் ஆக இருந்தது. | 2023 ஒக்தோபர் தகவல் தொழில்நுட்ப பதவியணியினர் சேர்க்கப்பட்ட பின்னர் SME Connect தளம் பகுப்பாய்வு செய்யப்பட்டு பிரச்சனைகளை இனங்கண்டு மேலதிக அத்தியாவசிய மாற்றங்கள் மற்றும் அபிவிருத்தி செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக வருடாந்த இலக்கை அடைந்து கொள்ளல் வரையறுக்கப்பட்ட போதும் SME Connect தளத்திற்கு Deloitte மற்றும் ADB நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன், தற்போது பல்வேறு தரப்பினருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்றது. | நடைமுறை ரீதியான நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு திட்டங்கள் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.3 முகாமைத்துவ தகவல் முறைமையின் வினைத்திறன்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபையால் ரூபா 9,600,000 செலவில் 2021 ஆம் ஆண்டின் போது நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி தரவு முறைமை ஒன்று (MSME- Data Base) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக கணக்காய்வுத் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. | Made in Sri Lanka வியாபார கட்டமைப்பில் 2021 திசெம்பர் 11 அந் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதும் 2023 ஒக்தோபர் 16 அந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவினால் முறைமைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு குறைபாடுகள் இனங்காணப்பட்டிருந்தது. தற்போது குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளதுடன் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் மீண்டும் ஒரு தடவை வியாபார தளத்தில் தரப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. | தரவு முறைமையை விரைவாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.4 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரச தொழில்முயற்சிகளின் கூட்டிணைந்த கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டியின் 4.2 (ஏ) பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்த வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக 02 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2023 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தின் போது தலைவர் கேட்டு விலகி இருந்ததுடன் புதிய தலைவர் / பணிப்பாளர் நாயகம் ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்டு கையேற்றிருந்த போதும் 2023.08.18 ஆந் திகதி புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டமையால் புதிய பணிப்பாளர் சபையின் கீழ் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்த வேண்டி ஏற்பட்டமையால் 02 கணக்காய்வு குழு கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |